# A WORD OF ADVICE

If You are ever in need of
Pure Musk, Saffron, Shilajit,
Hing, Pearls &
Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with
Un-Known and
Un-Reliable Firms

*Have your requirments from :—*

## KALIA BROTHERS (Regd.)

JULLUNDUR CITY—N. INDIA

☆

# ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி,
குங்குமப்பூ, சிலாஜித், பெருங்
காயம், முத்து, ஹிமாலய
மூலிகைகள் முதலியன
உங்களுக்குத் தேவையானால்—

முன் பின்னறியாததும்
நம்பிக்கையில்லாததுமான
ஸ்தாபனங்களோடு
ஒருபோதும் பரீக்ஷை செய்ய
வேண்டா.

☆

*உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:*

**கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)**

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

Grams : AMRUTHAM P. B. 82 Phone : 2208

# The Arya Vaidya Pharmacy (Coimbatore) Limited.

## H. O. : Trichy Road, Coimbatore-1

**THE IDEAL HOUSE FOR**

genuine Ayurvedic Medicines & Treatments.

NEW DELHI BRANCH:
23-B, Pusa Road, Karol Bagh,
NEW DELHI — 5 (Phone 55687)

**OTHER OFFICES:**

Madras (Phone 85752), Cannanore (Phone 92), Palghat (Phone 195), Kozhikode (Phone 984), Ernakulam (Phone 494) Ponani (Phone 41), Alatur, Kanjikode & Coimbatore (Opp. Rly. Jn.)

**FACTORY:** KANJIKODE (S. Rly)

**NURSING HOME:** RAMANATHAPURAM, COIMBATORE (Phone 2194)

Qualified & experienced Physicians available at all Branches. Letters from patients personally attended to by the Chief Physician and prescriptions and medicines sent. Special Treatments, including "Pancha Karma" successfully carried out at Coimbatore and at Branches in Ernakulam and Ponani.

Price list in English, Hindi, Tamil & Malayalam sent free on application.

For further details, kindly contact :—

*Arya Vaidyan* P. V. RAMA VARIER
Chief Physician & Managing Agent.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

*(ஸ்தாபிதம் 1939)* Phone No. 660

| | |
|---|---|
| *ரஸசாலா:* | *ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:* |
| 28, A. தென்னூர் ரோடு, | 31, சின்னக்கடைத் தெரு. |
| *திருச்சிராப்பள்ளி 1.* | *திருச்சிராப்பள்ளி 2.* |

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

*வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.*

## எமது விசேஷ மருந்துகள்

**சந்திரிகாவலேஹம்.**

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம், யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்பிரஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்ததுஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

*விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.*

S. V. ராதாகிருஷ்ணா சாஸ்திரி, *மானேஜிங் டைரெக்டர்*

# லக்ஷ்மி டிஸ்பென்ஸரி

**கீழ ராஜவீதி, — புதுக்கோட்டை.**

**கிளை — பொன்னமராவதி.**

★

மிகப் பிரபல ஆயுர்வேத வைத்யரும்
குழந்தை வைத்ய நிபுணருமான
ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத

## ஸ்ரீ. P. விச்வனாத சர்மா

அவர்களின்
மேற்பார்வையில் நடைபெறும்

**மிகச் சிறந்த ஆயுர்வேத ஔஷத சாலை.**

எல்லா வியாதிகளுக்கும்
விசேஷமாக சிசு நோய்களுக்கும்
ஆயுர்வேத முறைப்படி
சிறந்த சிகித்ஸை அளிக்கப்படுகிறது

★

**எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.**

**N. வைத்யனாதன்.**
உதவி வைத்யர்.

**P. விச்வனாத சர்மா**
பிரதான வைத்யர்.



MADRAS


# வைத்ய சந்த்ரிகை.

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 23 | சார்வரி – மாசி – பங்குனி | பகுதி 3 |
| Vol. 23 | MARCH 1961 | No. 3 |

आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥


## இன்றைய சூழ்நிலை

சென்னை அரசினரால் நியமிக்கப் பெற்ற ஸ்ரீ மேஹ்தா கமிட்டியினரின் சிபார்சையொட்டி நமிழ்நாட்டில் ஆயுர்வேதக் கல்லூரி நிறுவுவது பற்றி தற்போது அரசினர் யோசித்து வருகின்றனர். சென்றமாத இறுதியில் சென்னையில் இந்த ஆலோசனைக்கென தமிழ்நாட்டு அரசினர் ஒரு நிபுணர் குழுவைக் கூட்டியுள்ளனர். தமிழ்நாட்டின் மெடிகல் ஸர்விஸ் டைரெக்டரும் கனம் சுகாதார மந்திரியும் நம் மஹாமண்டலத்தின் உபதலைவர் ஸ்ரீ V. ஸுப்ரமண்யமும் ஸ்ரீ M. V. V. ராகவன ஸ்ரீ V. நாராயணஸ்வாமி அய்யர் முதலிய சென்னை வைத்யப் பிரமுகர்களும் இதில் கலந்து கொண்டுள்ளனர். கனம் மந்திரியும் மெடிகல் ஸர்விஸ் டைரெக்டரும் அலோபதிக் கலப்பில்லாத படிப்புமுறையையே வற்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது. கலந்துகொண்ட நிபுணர்களும் அரசினரும்

இதுபற்றி ஒரு முடிவுக்கும் வராமலேயே மீண்டும் யோசிக்க அவகாசத்தை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் கூட்டத்தை ஒத்திப் போட்டுள்ளனர். இந்தத் தாமதம் ஒருக்கால் இந்த கல்வி ஆண்டிலேயே கல்லூரியைத் துவக்க முடியாமற் செய்யலாம் எனத் தோன்றுகிறது.

தனிப்பட்டோ ராஜ்ய அரசினர் மூலமோ ஆயுர்வேதக் கல்லூரிகளை நடத்தி அதன் தர உயர்விற்கு (up grade) கோரினால் மத்ய சர்க்கார் 8 லக்ஷரூபாய் வரை அச்செலவிற்காக மான்யமாகத் தரத் தீர்மானித்துள்ளது. தமிழ்நாட்டில் ஸ்ரீ வேங்கடரமண ஆயுர் வேத கலாசாலையைத் தவிர தற்போது வேறு கலாசாலை நடைபெறக் காணோம். அக் கல்லூரி நிர்வாஹிகளும் கூடிய சீக்கிரம் B. I. M. பாட திட்டத்தைத் தமது கல்லூரியில் நடத்த இடவசதி முதலியவைகளைத் துரிதமாகச் செய்து வருவதாகத் தெரிகிறது. இம் முயற்சிகள் இவ்வாண்டிலேயே B. I. M. பாடதிட்டத்திற்கேற்ப வகுப்புகள் ஆரம்பிக்குமளவில் பலிக்குமானால், அரசினர் மூலம் ஆரம்பிக்கவிருக்கும் கல்லூரி நிறுவனம் சற்று காலதாமதப் படுவதால் ஏற்படும் அயர்வை நன்கு நீக்கிவிடலாம்.

சென்ற 30—35 ஆண்டுகளாக சென்னைராஜ்யம் ஆயுர்வேத விஷயமாகக் கடைபிடித்து வந்த கொள்கை இன்று அவர்களை ஸ்தம்பிக்கச் செய்திருக்கிறது. எவ்வழியிலும் தெளிவு காண முடியாமலிருக்கும் நிலையில் நிபுணர்களும் பலதரப்பட்ட கருத்துக்களை அளிக்கும் போது, தமக்கும் விசேஷ பற்று காட்ட முடியாத விஷயத்தில் இவ்விதத் திகைப்பும் முடிவு காணுவதில் காலதாமதமும் ஏற்படுவது ஸஹஜமே. அலோபதியிடம் மோஹத்தை வளர்க்கும் சூழ்நிலையையும் அலோபதியினர் ஜனசேவை செய்ய அதிக வாய்ப்பையும் அவர்களது திறமையை வெளிப்படுத்தும் பிரசாரத்தையும் அரசாங்கமே ஒருபுறம் செய்து கொண்டிருப்பதும், மற்றொரு புறத்தில் ஆயுர்வேத விஷயத்தில் திடமான கொள்கை வகுக்கத் தயங்கித் திகைப்பதுமான இந்த சூழ்நிலையில் பொது மக்களது ஆயுர்வேத அபிமானத்தைக் குறைய விடாது பாதுகாப்பது தனித்துத் தொழில் புரியும் ஆயுர்வேத வைத்யனுக்கும் தனிப்பட்ட முறையில் கலாசாலை நடத்தும் வேங

கடரமண ஆயுர்வேத கலாசாலையினருக்கும் தனிப் பொறுப்பா கின்றது. இனியும் இத்துறையில் வாளாவிருப்பதால் பின்னர் பலப்படுத்த முயற்சி எடுத்தும் கிருச்ரஸாத்ய—யாப்ய நிலையில் கஷ்டப்பட வேண்டி வரும். அல்லது ஆயுர்வேதம்- வேதாங்க மானதால் அபௌருஷேயம்—அநந்தம் என்று மனத்திடத்துடன் ஆயுர்வேதத்தின் பிற்காலம் தைவம் விட்டபடி என்று நினைத்து வைத்யசமூகம் வாளா விருப்பதாகும். இரண்டும் விரும்பத் தக்கதல்ல.

## வைத்திய சந்திரிகை 1961-ம் வருஷத்திய சந்தா

மஹாமண்டலத்திற்கும் வைத்திய சந்திரிகைக்கும் வரும் டிஸம்பரோடு 1961-ம் ஆண்டிற்கு தங்களிடமிருந்து சந்தா இது வரை வரவில்லை. தயைசெய்து உடன் சந்தா ரூபாய் ஐந்தை மணியார்டர் மூலம் பொதுக் கார்யதர்சி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம், 18. சின்னக்கடைத் தெரு, திருச்சி— 2 என்ற விலாஸத்திற்கு அனுப்பக் கோருகிறோம்.

4—4—1961-க்குள் சந்தா அனுப்பாதவர்களுக்கு ஏப்ரல் மாதத்திய வைத்திய சந்திரிகை இதழை V. P. மூலம் அனுப்ப உத்தேசித்திருக்கிறோம். தங்களது பதிலையும் சந்தாவையும் உடன் எதிர்பாக்கிறோம்.

தங்கள்,

A. ராகவ ராவ்,
பொதுக்கார்யதர்சி.

திருச்சி,
7—2—1961

ஸ்ரீரங்கம் ஸ்ரீலக்ஷ்மீ ப்ரஸந்ந வெங்கடேச ஆயுர்வேத
தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

பிப்ரவரி மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | 674 | 1786 |
| பெண்கள் | 746 | |
| சிறுவர் | 366 | |

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வகேட்,
ராயபாளையம் பண்ணை.

**Statement about ownership and other particulars about newspaper (VAIDYACHANDRIKA) to be published in the first issue every year after the last day of February.**

FORM IV.

(See Rule 8)

| | | |
|---|---|---|
| 1. | Place of Publication. | TIRUCHIRAPALLI. |
| 2. | Periodicity of its publication | MONTHLY |
| 3. | Printer's Name. | S. M. SUNDARARAJACHARYA |
| | Nationality. | INDIAN |
| | Address. | East Chitra St., SRIRANGAM. |
| 4. | Publisher's Name. | S V. RADHAKRISHNA SASTRI Vaidya |
| | Nationality. | INDIAN |
| | Address. | Chinnakadai St., Tiruchy 2. |
| 5. | Editor's Name. | S. M SUNDARARAJACHARYA |
| | Nationality. | INDIAN |
| | Address | East Chitra St., SRIRANGAM |
| 6. | Names and addresses of individuals who own the newspapers and partners or share holders holding more than one percent of the total capital. | TAMILNAD AYURVEDA MAHAMANDALAM. TIRUCHY 2. |

I, S. V. RADHAKRISHNA SASTRI, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) S. V. Radhakrishna Sastri,

Date 7—3—61 Signature of publisher

# சிறுநீரின் ஆமபக்வநிலை.

[வைத்ய. S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி, திருச்சி.]

## முன்னுரை

சரீரத்திலுள்ள தோஷங்கள் தாதுக்கள் மலங்கள் என்ற மூன்று பொருள்களும் ஒவ்வொரு க்ஷணமும் பாகமடைந்து பிரிந்தும் சேர்ந்தும் சரீர வளர்ச்சிக்கும் தேய்வுக்கும் காரணமாகி வளர்ச்சிக்குத் தேய்வும் தேய்வுக்கு வளர்ச்சியும் ஈடுகொடுக்கும் போது ஸமநிலை பாதுகாக்கப் படுகின்றது. சரீரத்தின் வளர்ச்சிக்குரிய பருவமான பால்ய யௌவன காலத்தில் வளர்ச்சி மிகுந்து உடல் வளர்வதும், விருத்த (வளர்ச்சியுற்ற) தசையின் எல்லை யடைந்ததும் கிரமமாக தேய்வு மிகுந்து உடல் தேய்வதும் இயற்கை எனினும், இவ்விரு தசைகளிலும் வளர்ச்சி தேய்வுகளின் ஈடு கொடுக்கும் தன்மை காணப்படுகின்றது.

பாகம் என்ற ஒரு கிரியை உடலில் நடைபெறும் போது எல்லாப் பொருளும் பிரிவதும் தன் தன் இனத்தோடு சேரத் தகுதி பெற்றுச் சேர்வதும் பாகத்தைத் தொடர்ந்து நடைபெறுகின்றன. இந்தப் பாகத்தை நடைமுறையில் நிர்வஹித்துக் கொடுப்பவையை அக்னி என்பர். புறத்தே தோன்றும் அக்னியின் செய்கை யனைத்தும் இதிலுமுண்டு. வெளியுலகில் அக்னி, உணவு முதலியவைகளைப் பாகம் செய்து தேவைப்படாததை எரித்துக் குறைப்பதைப் போல, உள்ளுள்ள அக்னி, ஏற்ற உணவு முதலியவைகளைப் பாகம் செய்து பிரித்து மாற்றுருவமளித்தும் உபயோகமில்லாததை எரித்தும் உதவுகின்றது. இந்த அக்னி கார்யம் உடலில் ஜடராக்னியாலும் அதன் மாற்றுருவங்களான ஏழு தாத்வக்னி, ஐந்து பௌதிகாக்னிகள் இவைகளாலும் நடைபெறுகின்றன. இந்த அக்னி சக்திக்கு க்லேதகம் எனும் கபமும் ஸமானனென்ற வாயுவும் முக்யமாக உதவுகின்றன.

இந்த பாகக் கிரியை சரியே நடந்துவந்தால் ஆரோக்கியம். ஜடராக்னி முதலியவையின் சக்திக்குறைவால் சரியே நடக்காதபடி, குறைந்த அளவில் நடந்து பாகம் முற்றுப் பெறுவிட்டால் ஆமநிலையும், ஜடராக்னி முதலியவையின் சக்தி அதிகமாகி அதிக அளவில் நடந்தால் அதிபக்வ நிலையும் பாகத்தில் ஸஹாயகமான

வாத கபங்களின் குறுக்கீட்டால் பாகத்தின் முறை தவறினால் விதக்தநிலையும் ஏற்படுகின்றது.

இந்த பாகம் தோஷங்கள் தாதுக்கள் மலங்கள் என்ற மூன்றிற்கு முண்டு. தோஷத்தன்மை, தாதுத் தன்மை, மலத் தன்மை என்பது ஒரு பொருளின் நிலைத்த அல்லது குறிப்பிட்ட தன்மையல்ல. உடல் முழுவதையுமே வாதபித்த கபங்கள் என்ற மூன்றாகவே பிரித்தும் ஆராயலாம். ரஸரக்தமாம்ஸாதி தாதுக்களாகவே பிரித்தும் ஆராயலாம். ஸ்வதந்திரமாக தூஷணத் தன்மை மிகுந்துள்ள நிலையிலிருப்பவை தோஷம் என்றும், தாரணத்தன்மை மிகுந்துள்ள நிலையிலிருப்பவை தாதுவென்றும் கொள்வது உண்டு. தாதுக்கள் ஸார நிலையிலிருப்பவை. பாகத்தில் ஸார நிலை குன்றியவை மலமாகப் பிரிக்கப் படுகின்றன. மலமாகப் பிரிந்தவுடனேயே அவை வெளியேற்றத் தக்க உதவாத பொருள் என்ற கருத்து அல்ல. உபதாதுவைப் போன்று ஆனால் அதைக் காட்டிலும் ஸாரத்தன்மை குன்றியவை எனவே பொருள். ஒரு பொருள் உற்பத்தியில் ஏற்படும் Bye-product துணைப் பொருள் போல. உதவாத பொருள் waste product அல்ல. இவையும் தன்னளவிலே சரீரதாரணத்திற்கு உதவுகின்றன. இவைகளின் க்ஷயமும் விருத்தியும் வியாதிக்குக் காரணமாகின்றன. ஸமநிலை ஆரோக்யத்திற்கு உதவுகின்றது. இவை முற்றிலும் சரீரதாரணத்திற்கு உதவாதபோது வெளியேற்றப் படுகின்றன. இந்த வெளியேற்ற வேண்டிய நிலையடைந்த மலங்கள் உடலுக்குக் கெடுதி விளைவிக்கக் கூடியவையே.*

### மூத்திரம்

மூத்திரமென பஸ்தியிலிருந்து மூத்திர மார்க்கம் வழியே வெளியேறும் நீரை மூத்திரம் என்கிறோம். இதையே சிறுநீர் என்பர். இதன் உற்பத்தி— வெளியேற்றம் பற்றியுள்ள சாரீர க்ரியையில் நவீன விக்ஞானத்திற்கும் ஆயுர்வேதத்திற்கும் கருத்து வேற்றுமையுண்டு. தத்துவசாஸ்திரங்களான இவ்விரண்டிலும்

---

* ते सर्वेऽपि धातवो मलाख्याः प्रसादाख्याश्च रसमलाभ्यां पुष्यन्तः स्वं मानमनुवर्तन्ते यथावयः शरीरम् ।
(சரக. ஸூ. 28)

शरीरधातवस्त्वेवं द्विविधाः संग्रहेण । मलभूताः प्रसादभूताश्च । तत्र मलभूतास्ते शरीरस्य ये बाधकराः तद्यथा शरीरच्छिद्रेषूपदेहाः पृथग्जन्मानो बहिर्मुखाः परिपक्वाश्च धातवः ।
(சரகசாரீரம். 6)

பிரத்யக்ஷ திருச்யமான பொருளில் ஏற்படும் கருத்து வேற்றுமை தத்துவ நோக்கிலுள்ள அடிப்படை வேற்றுமையை ஒட்டியது. இவ்வேற்றுமை உற்பத்தியிலிருந்து வெளியேற்றம் வரை எல்லா நிலைகளிலும் தொடர்கின்றது. ஆனால் இரண்டும் ஒரே பொருளை அதன் தனித்தன்மையை உண்மையாகத் தான் கூறுகின்றன.

மூத்திரத்தின் உற்பத்தி விருக்கங்களில் என்பது அலோபதி நூல்கள் கூறுவது. ஆயுர்வேதம் ஆமபக்வாசயங்களிலே உற்பத்தியைக் காணுகின்றது. ரக்தஸம்வஹனம் (உடலிலே ரக்தம் பரவிப் பாய்வது) நடைபெறும் போது விருக்கத்தை அடையும் ரக்தத்திலிருந்து மூத்திரமாகப் பிரிக்கவேண்டிய பொருள் விருக்கத்திலுள்ள சிறு சிறு நுண்ணிய கேசிகைகள் மூலம் கசிந்து விருக்கத்தின் ஆதாரப்புனலிலே சொட்டி பஸ்திக்கு கவீநிகைகள் மூலம் அனுப்பப்படுகின்ற தென்றே ஆலோபதியின் மூத்ரோத்பத்தியைப் பற்றிய சுருக்கம். ரக்தமாக இருந்த பொருளிலிருந்து பிரிவது மூத்திரம் என்ற வகையில், மூத்திரம் ரக்தமலமாக விருக்கங்களில் பிரிக்கப் படுகின்றது என்று அலோபதியின் முடிவு. ஆயுர்வேதம் தன் போக்கிலே செல்வதைப் பார்ப்போம்.

முன்னுரையிலே கூறியபடி ஒருபொருள் ரஸாயன மாறுதல் பெறும் போது, பிரியும் துணைப்பொருளே மலமென்றோ மல்லவா? உணவு பாசக பித்தத்தால் பாகமடைந்ததும் அதிலிருந்தும் முக்கிய (ஸார)ப் பொருளாக ரஸமும் துணைப் (கிட்டப்) பொருளாக புரீஷ மூத்திரங்களும் உண்டாகின்றன.* பக்வாசயம் ஆமாசயம் இவ்விரண்டிலும் இந்த ஸார கிட்டப் பிரிவினை நடைபெறுகின்றது. தொண்டையிலிருந்து குதவளிகள் வரை வியாபித்து நிற்கும் ஆமபக்வாசயங்களை மஹாஸ்ரோதஸ் என்பர். ஆக மூத்திர உற்பத்தி மஹாஸ்ரோதஸ்ஸிலே நடைபெறுகின்றது. ஜடராக்னி சரியே பணி புரிய ஸாரகிட்டப் பிரிவினையில் ஆமக் கலப்பு இல்லாது ஸாரமான ரஸமும் மூத்திர †புரீஷங்களும் ஏற்படும். ஜடராக்னிக்கு பலக்குறைவு ஏற்பட்டு

* पक्वामाशयमध्यस्थं पित्तं चतुर्विधमन्नपानं पचति, विवेचयति च दोष-रस-मूत्र-पुरीषाणि । (ஸுச்ருத ஸூ. 21)

विण्मूत्रमाहारमलः । (ஸுச்ருத ஸூ. 46)

किट्टमन्नस्य विण्मूत्रं । (சரக சிகித்ஸா. 15)

† புரீஷத்தைத் தமிழிலே மலம் என்றும் மூத்திரத்தை நீர்—ஜலம் என்றும (மலஜலம்) குறிப்பிடுவது பொதுமக்களின் வழக்கம். ஆயுர்

பாகக் கிரியை சரியே நிறைவேறு விடில் ஆமபக்வ ரஸத்திலும் மூத்திரத்திலும் புரீஷத்திலும் தொட்ரும்.

குடலில் மூத்திரமாகப் பிரியும் திரவம் எவ்விதம் பஸ்திகளில் சேர்கின்றது? பஸ்திகளில் சேரும் வரை அதனல் சரீர தாரணத்தில் எத்தகைய உதவி கிடைக்கின்றது? ப்ரத்யக்ஷமாக அது பிரியும் விருக்கத்திலேயே அதன் உற்பத்தியைக் கூருமல் மஹாஸ்ரோதஸில் அதன் உற்பத்தியைக் காணுவதால் ஆயுர்வேதத்தின் முக்யப் பிரயோஜனமான ஆரோக்ய ரக்ஷணத்திலோ வியாதி சிகித்ஸையிலோ விசேஷப் பிரயோஜனம் என்ன என்பது போன்ற கேள்விகள் ஏற்படுகின்றன. இவைகளை முதலில் ஆராய்ந்த பின்னரே மூத்திரத்தின் ஆம பக்வ நிலையைப் பற்றி ஆராய வேண்டியிருக்கிறது.

ஸுச்ருதர் மூத்ரோத்பத்தியைப் பற்றி வெகு விரிவாகக் கூறுகிருர். அதன் சுருக்கம் பின் வருமாறு:— பக்வாசயத்தில் சிறுசிறு குழாய்கள் மூத்திரத்தைச் சேர்ப்பதற்கென்றே உள்ளன.* இவைகளின் வாய்கள் மிகவும் ஸூக்ஷ்மமானவை. அதனல் எளிதில் புலப்படாதவை. இவை குடலில் ஸாரமலப் பிரிவினை நடைபெறும் போது பிரியும் மூத்திர மலத்தை இரவும் பகலுமாக உடலில் சோரவைத்து உள்ளிழுத்து மூத்திரத்தை மேலும் புஷ்டியடையச் செய்கின்றன. இவ்விதம் பிரிந்து உடலில் சேர்ந்து ஸம்வஹன மடைந்த மூத்திரம் தன்னளவிலிருந்து உடலைப் போஷிக்கின்றது. நதிகள் ஊர்ந்து சென்று ஸ்திரமாக இருக்கும் கடலைத் தன்னளவு குன்ருது போஷிப்பது போல, குடலில் மூத்திரமாகப் பிரியும் ஜலாம்சத்தை அல்லும் பகலும் எடுத்துச் செல்லும் மூத்திரவஹநாடிகள் ஸ்திரமாக ஸம்வஹனம் செய்து கொண்டிருக்கும் மூத்திர தாதுவைப் போஷிக்கின்றன. தாது போஷணத்திற்குப் பின்னர் மிகுந்து வெளியேற்றப்

வேதத்தில் மலம் என்பது பல் வேறு கழிவுப் பொருள்களின் பொதுப் பெயர். அப்பெயர் கொண்டு புரீஷத்தையும் இங்கு குறிப்பிடுவது தவறாத்தை யளிக்குமென மலஜலங்களை புரீஷமூத்திரங்கள் எனவே முறையே குறிப்பிடுகிறேன்.

* पक्वाशयगतास्तत्र नाड्यो मूत्रवहास्तु याः ।
तर्पयन्ति सदा मूत्रं सरितः सागरं यथा ॥
सूक्ष्मत्वान्नोपलभ्यन्ते मुखान्यासां सहस्रशः ।
(ஸுச்ருத நிதானம். 3)

பட வேண்டிய அம்சமும் ரஸாதி ஸம்வாஹகமான சிரைகளி லிருந்து கசிவாக வெளியேற்றப்பட்டு பஸ்தியை அண்டு கின்றன.*

ஸுச்ருதர் கூறும் மூத்ரோத்பத்தி – நிர்கம விஷயம் நவீன விக்ஞானத்தின் நோக்கிலிருந்து பல அடிப்படையான பேதங் களை உணர்த்துகிறது.

1. மூத்திரத்தின் உத்பத்தி பிரிவினை‡ மஹாஸ்ரோதஸில் நடைபெறுகிறது.

2. இங்கு உற்பத்தியான மூத்திரம் கேசிகைகள் போன்ற நுண்ணிய ரஸாயனிகளால் உள்ளிழுத்துச் செல்லப்படுகின்றது.

3. உடலில் ஏற்கனவே தாது போஷணத்திற்கும் தாரணத் திற்குமாக ஸம்வஹனத்திலிருந்து வரும் மூத்திர தாதுவிற்கு இது புஷ்டியளிக்கின்றது.

---

* नाडीभिरुपनीतस्य मूत्रस्यामाशयान्तरात् ।
जाग्रतः स्वपतश्चैव स निःस्पन्देन पूर्यते ।
आमुखात्सलिले न्यस्तः पार्श्वेभ्यः पूर्यते नवः ।
घटो यथा तथा विद्धि बस्तिर्मूत्रेण पूर्यते ।

(ஸுச்ருத நிதானம். 3)

‡ அதர்வ வேதத்தில் மூத்திரத் தடை ஏற்பட்ட நோயாளிக்கு அத் தடை நீங்கச் செய்வதாக வைத்யன் கூறும் சொல்லாக உள்ள மந்திரம் பின்வருமாறு காணப்படுகின்றது.

यदान्त्रेषुगवीन्योः यत् बस्तावधि संश्रितम् ।
एवा ते मूत्र ... (அதர்வஸம்ஹிதை. 1-1-3.)

இங்கும் மூத்திரம் அந்திரம் (குடல்) கவீனிகை(விருக்கங்களிலிருந்து பஸ்தி செல்லும் இரு குழாய்கள்) பஸ்தி இவைகளில் தடைபட்டுள்ள மூத்திரத்தை வெளியாக்குகின்றேன் என்ற விடத்தில் விரிவுரையாளரான ஸாயணர் ஆந்திர என்ற சொல்லிற்கு आन्त्रेषु- उदरान्तर्गतपुरीतत्सु எனப் பொருள் கூறியிருப்பதும் கவனிக்கத் தக்கது ஆந்திர என்ற சொல்லிற்கு அலோபதியின் வழிக்கேற்ப விருக்கங்கள் எனப் பொருள் கூறுவர் சிலர். அது அவசியமில்லாதது.

4. பின்னர் ஸம்வஹனத்திலிருந்து பிரியும் மூத்திரம் பஸ்திகுவில் சேர்கின்றது. (விருக்கங்களுக்கு இங்கு முக்கியத்துவம் இல்லை)*

இங்கு மற்றொரு விஷயமும் கவனிக்கத் தக்கது. புரீஷ மூத்திரங்களுக்கு அவை முக்கியமான ஸாரபாகமல்ல. உபதாதுவிற்கும் அடுத்த வரிசையில் குறிப்பிடத்தக்கவை. வெளியேற்றப்பட வேண்டிய எல்லா அம்சங்களும், பக்வமான தோஷ தாதுக்கள் உள்பட இவ்வுருவிலேயே வெளியேற்றப் படவேண்டியிருக்கின்றன—என்ற பொருளிலேயே மலம் என்ற ஸாங்கேதிகப் பெயர். மலம் என்பதற்கு உதவாத பொருள் என்று இங்கு பொருள் கொள்வது கூடாது.†

மற்றொன்று— சரீரத்தில் உள்ள எல்லா தாதுக்களும் கன பாகங்களும் உணவிலிருந்து ஸாரமாகப் பிரிக்கப்பட்டுத் திரவமாக உள் சேர்க்கப்பட்ட ரஸதாதுவின் பரிணமங்களே. ரஸமே எல்லா தாதுவாகவும் மாறுகிறது என்றும் ரஸத்திலிருந்து ரக்தம், ரக்தத்திலிருந்து மாம்ஸம் என்றவாறு உள்ள அமைப்பிலும் ரஸமே ஆதிகாரணம் என்றும் ஸித்தாந்தம். அதனாலேயே உடலில் பரவிப்பாயும் எல்லா திரவாம்சங்களும் ரஸம் என்ற பெயரிலேயே குறிப்பிடப் படுகின்றன. மற்ற தாதுவாகப் பாகமடைந்த பின்னரும் தன்னிடம் போய் சேராதும் திரவநிலையிலேயே இருப்பதுமான எல்லா தாத்வம்சங்களும் ஆங்காங்கு ஸார மல விபாக காலத்தில் ஏற்படும் மலங்களும் ஸம்வஹன ஸ்வபாவமுள்ள ரஸதாதுவிலேயே கலந்தே தன் தன்னிடம் போய் சேர்ந்து தன் தன் நிலை பெறுகின்றன. அத

---

* இங்கு சார்ங்கதர ஸம்ஹிதையில் காணப்படும் மூத்ரோத்பத்தியைக் கூறும் ச்லோகம் கவனத்திற்குகந்தது—

आहारस्य रसः सारः सारहीनो मलद्रवः ।
शिराभिस्तज्जलं नीतं बस्तौ मूत्रत्वमाप्नुयात् ।

(பூர்வகண்டம். 6 அத்.)

† पुरीषमुपस्तंभं वाय्वग्निधारणं च करोति । (ஸு. ஸூ. 15)

ते सर्वेऽपि च धातवो मलाख्याः प्रसादाख्याश्च रसमलाभ्यां पुष्यन्तः स्वं मानमनुवर्तन्ते यथा वयः शरीरम् । (சரக. ஸூ. 28)

முதலிய வாக்கியங்கள் மலங்களுக்கும் சரீரதாரண போஷணத்தில் தாதுக்களுக்கடுத்த வரிசையில் பங்கு உண்டு என்பதைப் புலப்படுத்துகின்றன.

னால் தான் ரக்தஸம்வஹனம் என்று ஆயுர்வேதம் சொல்வ
தில்லை. ஸம்வஹனம் செய்வது ரஸம்தான். ஸம்வஹன நிலை
யிலே மற்றவைகளையும் தன்னுள் கரைத்து எடுத்துச் செல்கின்
றது என்று ஆயுர்வேதம் கருதுகிறது. தன்னிலிருந்து பிரிந்த
வையைக் கூட அவை சேருமிடம் வரும்வரை தன்னுருவிலேயே
எடுத்துச் செல்கிற ஸ்வபாவமுள்ள ரஸம் தான் உற்பத்தியா
கும் போது பிரிந்த மூத்திரத்தையும் தன்னுடனே சேர்த்து
உள்ளிழுத்துச் சென்று உடல் முழுவதும் இழுத்துச் செல்கின்
றது. ஆக மூத்ர ஸம்வஹனமும் ரஸாயனிகள் மூலம் ஆரம்
பித்து ஸிரை தமனி கேசிகைகள் மூலம் பஸ்தியை அடையும்
வரை நடைபெறுகின்றது என்றே ஆயுர்வேத ஸித்தாந்தம்
எனக்கொள்ளலாம்.

மூத்ரோத்பத்தியிலோ ஸம்வஹனத்திலோ வெளியேற்றத்
திலோ ஆயுர்வேதத்தில் விருக்கங்கள் ஒரு பங்கும் பெறவில்லை.
எங்கும் நேரிடையாக பஸ்தியே குறிப்பிடப் படுகின்றது. ஆனால்
விருக்கங்களைப்பற்றிய குறிப்பு ஆயுர்வேதத்தில் வேறு இடங்க
ளில் காணப் படுகின்றது. மேதோவஹஸ்ரோதஸ்ஸுகளின்
மூலமாகவும் வயிற்றினுள் உள்ள கொழுப்பைப் புஷ்டி செய்ப
வைகளாகவும் காணும் குறிப்புகள்* முக்யமாகக் கவனிக்கத்
தக்கவை. ஸ்ரோதஸ்ஸுகள்— ரஸாயனிகள் மூலம் மேதஸ்—
தாது ஸம்வஹனத்தில் செல்லும் போது மூத்திரமாக வெளி
யேறாமல் தடுப்பது, நோயுற்ற நிலையிலும் பலவீனப்பட்ட நிலை
யிலும் அந்த மேதஸ் அம்சத்தை வெளியிடுவதும் ஆக இவை
இதன் ஆரோக்ய— ரோக நிலையில் ஆகும் செயல்கள். மேதஸ்
ஸைக் காப்பாற்றிப் பிரித்துத் தரும் இச் செயல் மூலமாக வயிற்
றினுள் உள்ள மேதஸ்ஸிற்கு மேலும் புஷ்டி கிடைக்கின்றது.
ஆக மேதஸ், வஸை, லஸீகை முதலிய ஆப்ய ஸ்நேஹாம்சங்
களின் பாகம், பிரிவினை இவைகளில் விருக்கமும் அதனுள்
உள்ள பித்த-அக்னி சக்தியும் உதவுகின்றது. மேதஸ் முதலிய
வைத் தனித்தோ (ஆல்ப்யுமன்யூரியா முதலியதில்) அல்லது
க்லேதனம் செய்து நீராக்கியோ (உதகமேஹம் முதலியதில்)
நோய்களை உண்டாக்கும் சக்தியும் இந்நோய்கள் வராமல் தடுப்
பதும் விருக்கத்தின் விக்ருதி ப்ரக்ருதி நிலைகளைப் பொறுத்
துள்ள தென்பதும் மேதஸ்ஸின் பாகம், ரக்ஷணம், பிரிவினை
இவைகளில் விருக்கங்களுக்கு அதிக சக்தி உண்டென்பதும்

---

* मेदोवहे द्वे तयोर्मूलं कटीवृक्कौ च । (ஸுச்ருதசாரீரம். 9 அத்.)

वृक्कौ पुष्टिकरौ ज्ञेयौ जठरस्थस्य मेदसः
(சார்ங்கதர ஸம்ஹிதை பூர்வ—5.)

முன் கூறப்பட்டுள்ள விருக்க ஸம்பந்தமான வாக்யங்களிலிருந்தும் தெரிகிறது. இதைத் தவிர மூத்திர உத்பத்திப் பிரவிருத்திகளில் நேரிடையான ஸம்பந்தம் ஒன்றும் குறிப்பிடக் காணோம். ஆனால் விருக்கத்திற்கும் மேதஸிற்குமுள்ள நெருக்கமான ஸம்பந்தமும், மேதஸிற்கும் வியர்வைக்குமுள்ள ஸம்பந்தமும்[1] கவனிக்கும் போது உடலில் உள்ள கனப் பொருளை நீர்க்கச் செய்து வெளியாக்கும் பொறுப்பு விருக்கங்களுக்கு உண்டு என்று கொள்வது ஸாத்யமாகும்.

மூத்ர ரோகங்களிலும் மூத்ரத்தின் பிராகிருதமான ஸம்வஹனத்திலும் மேதஸிற்கும்[2] பெரும் பங்கு உண்டு. இதைப் பிரமேஹ நிதானத்தில்[3] ஸ்பஷ்டமாகக் கூறப்படுவதைக் காண்கிறோம்.

மஹாஸ்ரோதஸ்ஸிலிருந்து பஸ்திவரை மூத்திரமான திரவமலத்தை எடுத்துச் செல்லும் குழாய்களை அம்புவஹம், உதகவஹம் என்றும் ஆங்காங்கு உபயோகிக்கப்பட்டு வெளியாக்கப் படவேண்டியவைகளை கரியும் திரவமாக்கும் பரிணாமத்தை

---

1 स्वेदवहानां स्रोतसां मेदोमूलं लोमकूपाश्च । (சரகவிமானம். 5)
मलः स्वेदस्तु मेदसः (சரகசிகித்ஸா. 15)

2 मेदः संश्रयांस्तु प्रचक्ष्महे ।
निन्दितानि प्रमेहाणां पूर्वरूपाणि यानि च । (சரக ஸூத்ர. 28)
स्निग्धमूत्रस्वेदत्वं बृहच्छरीरमायासासहिष्णु च मेदः सा ।
(ஸுச்ருத ஸூத்ர 35)
वर्णस्वरनेत्रकेशलोममूत्रपुरीषेषु विशेषतः स्नेहो मेदः साराणां ।
(சரக விமானம். 28)

3 शरीरक्लेदस्तु श्लेष्ममेदो विमिश्रः प्रविशन्मूत्राशयं मूत्रत्वमापद्यमानः ... ... ... ...

मूत्रवहानां स्रोतसां वंक्षणबस्तिप्रभवाणां मेदः क्लेदोपहितानि गुरूणि मुखान्यासाद्य प्रतिरुध्यते । (சரக நிதானம். 4)

இங்கும் சரகவிமானம் 4-வது அத்யாயத்திலும் मूत्रवहानां स्रोतसां बस्तिमूलं वंक्षणौ च என்னுமிடத்திலும் ஸுச்ருதரின் பஸ்தி லக்ஷணம் கூறுமிடத்து नाभिपृष्ठकटीमुष्कगुदवंक्षणशेफसाम । एकद्वारस्तनुत्वक्को मध्ये बस्तिरधोमुखः என்னுமிடத்திலும் மூத்ரவஹஸ்ரோதஸ்ஸுகளுக்கு வங்க்ஷணம் (?) மூலம் எனக் கூறப்படுவதும், வங்க்ஷணம் என்பது விருக்கம் என்று யாதவஜீ முதலியவர்கள் கருதுவதும் கவனிக்கத் தக்கது.

க்லேதமெனவும், இந்தக்லேதம் திரவ மலமான இந்த மூத்திரத்தின் பிராகிருதச் செயலென்றும் இந்தக் காரியம் தடைபடுவதால் உதரம் முதலிய நோய்கள் உண்டாகின்றன என்று குறிப்பிடுவதையும் காண்கிறோம்.*

ஆக மூத்திர உத்பத்தியிலிருந்து வெளியேற்றம் வரை ரோக ஆரோக்ய அதிஷ்டானமாக— மஹாஸ்ரோதஸ்- அதிலும் முக்யமாக க்ரஹணீ, ரஸாயனிகளான உதகவஹஸ்ரோதஸ்கள் ரஸரக்தவஹ சிரை தமனிகள் விருக்கம் பஸ்தி என்ற உறுப்புகள் முக்யப் பங்கெடுத்துக் கொள்கின்றன. கிரஹணியில் நடக்கும் ஸாரகிட்டப்பிரிவினைக்குப் பின் திரவ மலமான மூத்திரம் ரஸாயனிகளுடன் உட்சென்று மேதோக்ரந்திகளில் நடக்கும் ஸ்வேதக்ரியையில் ரோமகூபங்கள் வெளியேற்றியதைத்தவிர மற்ற ஸ்வேத அம்சத்தையும், பக்வமாயும் அபக்வமாயும் (ஆமமாயும்) மலமாயும் உள்ள தாதுக்கள் வெளியேற்றப்படத்தக்க நிலையை அடைந்து க்லேதம் என்ற கசியும் நிலைக்குக் கொணரப்பட்டவைகளையும் சேர்த்துக் கொண்டு விருக்கத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்டு பஸ்தியில் சேகரிக்கப் பட்டு வெளியாக்கப் படுகின்றது என்ற ஒரு சரீரக்ரியா ஞானம் ஆயுர்வேத ரீதியில் அமைகின்றது.

இனி எடுத்துக் கொண்ட விஷயத்திடம் செல்வோம்.

ஆமமான மலங்களின் லக்ஷணமாகக் குறிப்பிட்டுள்ள† ஸ்ரோதஸ்ஸுகளில் அடைப்பு, தளர்ச்சி, உடல் பாரமிகுதி,

---

* रुध्वा स्वेदांबुवाहीनि दोषाः स्रोतांसि संचिताः ।

(சரக சிகித்ஸா. 13)

कोष्ठादुपस्नेहवदन्नसारः निःसृत्य दुष्टोऽनिलवेगनुन्नः ।

(ஸுச்ருத உதரநிதானம். 7)

कोष्ठान्निःसृत्येति । कोष्ठशब्देनाहारपाकाधारः रसदोषमूत्रपुरीषविभागाश्रयः ग्रहण्यभिधान उच्यते । तत्रैव साराख्यरसविभागात् । कथं पुनरेतदन्त्राणां रन्ध्राभावादन्नरसस्य निःसरणमित्याह । उपस्नेहवदिति । नूतनघटाद्युपस्नेहो यथा अणुभिः बहिः स्रोतोभिः बहिः स्रवद्दृश्यते तद्वत् । यद्येवं नित्यमेवोदराणां संप्राप्तिः प्राप्नोति । उदरारंभकदोषदूषित शरीरस्य रसस्वेदांबुवहानां दुष्टेः ।

(ஸுச்ருத உதர நிதானம். கயதாஸ வ்யாக்யானம்)

बस्तिपूरण विक्लेदकृन्मूत्रं । (ஸுச்ருதஸூத்ர. 15)

† स्रोतोरोधबलभ्रंशगौरवानिलमूढताः ।

வாயுத்தடை, சோர்வு, அஜீரணம், வாயில் உமிழ்நீர் கசிதல், மலக்கட்டு, அருசி, அயர்வு இவையும் மூத்திரத்தின் ஆமநிலையில் காணக்கூடியவையே. மூத்திரத்தின் ஆமநிலை இருவகையில் ஏற்படக்கூடும். ஒன்று உண்ட உணவு ஜீர்ணமாகாத நிலையிலேயே மூத்திர புரீஷங்களிலும் ஸாரமான ரஸத்திலும் ஆம (பக்குவமடையாத) அம்சமும் கலந்து பின்னர் பஸ்தி மூலம் வெளியாவது; மற்றொன்று ஆங்காங்கு ரஸாதி தாதுக்களின் பாக காலத்தில் தாத்வக்னிகளின் பலக்குறைவாலும், ஸம்வஹனத்தில் விருக்க பலக்குறைவாலும் அந்த தாதுக்கள் பாகமடையாது மூத்திரத்துடன் வெளியாவது என. முதல் ஆமத்தில் அன்னத்தின் ஆமாம்சமும் இரண்டாவதில் தாதுக்களின் ஆமாம்சமும் கலந்து வெளியாகலாம். இந்த மூத்ரத்திலுள்ள ஆமம் பஸ்தி வழியே வெளியாகும் போது உதகமேஹம், லவீகாமேஹம், மதுமேஹம், லாலாமேஹம், முதலிய நோய்களும், ஸம்வஹன காலத்தில் ஸ்தானஸம்சிரயம் ஏற்பட பிரமேஹபிடகை, ஸந்திவாதம், ஆமவாதம் சோதம், ரக்தவாதம், உதரம், சோதம், விஸர்பம், சீதபித்தம், உதர்தம் முதலிய நோய்களும் ஏற்படுகின்றன. சிகித்ஸையும் இந்த ஸம்ப்ராப்தியை மனதிற் கொண்டே செய்யவேண்டியிருக்கிறது.

ஆக மூத்திரத்தின் ஆமநிலையைப் போக்க சிகித்ஸை செய்யும்போது மஹாஸ்ரோதஸ்ஸிலிருந்து பஸ்திவரையிலுள்ள மூத்திர ஸம்வஹன மார்க்கம் முழுவதும் சிகித்ஸைக்கு அதிஷ்டானமாகின்றது. மேலும் மூத்திரத்தின் ஆமதோஷத்தைப் போக்க கிரஹணீ- பக்வாசயங்களில் செய்யப்படும் சிகித்ஸையே மூல சிகித்ஸையாகும். அதனாலேயே மலவிரேசன சிகித்ஸையையே அதிலும் விசேஷமாக நீர் பேதி முறைகளையே மூத்ராசய சோதன சிகித்ஸையாகவும், ஆமபாசன சிகித்ஸையையே மூத்ர பாசன சிகித்ஸையாக கொண்டுள்ளதையும் கவனிக்கும் போது ஆயுர்வேதிகள் பக்வாசயத்தில் மூத்ரோத்பத்தியைக் காணுவதன் நோக்கம் நமக்கு புலப்படுகிறது. மூத்ரத்தின் ஆமநிலை வியாதியை எவ்விதம் உண்டாக்குகின்றது என்பதையும், அதன் பரிஹாரமாக செய்யப்படும் ஆயுர்வேத சிகித்ஸை எவ்விதம் செயலாற்றுகிறதென்பதையும் பிறகு கவனிப்போம்.

---

आलस्या पक्तिनिष्ठीवमलसंगारुचिक्लमाः ।

लिंगं मलानां सामानाम् ... (அஷ்டாங்கஹ்ருதயம். 13)

# ஸந்நிபாத ஜ்வரத்தில் தேன்

காச்யப ஸம்ஹிதையில் ஸந்நிபாதஜ்வரசிகித்ஸை கூறுமிடத்து ஸந்நிபாத நிலையில் முதலில் எந்த தோஷத்திற்கு சிகித்ஸை செய்யவேண்டுமென்ற கேள்வியை முதலில் காசியபர் எழுப்பி, எந்த தோஷம் மிகவும் கடுமையாக இருக்கிறதோ அதற்கு முதலில் சிகித்ஸை செய்யவேண்டுமென்று சிலர் கூறலாம்; ஆனால் அவ்விதம் கூறுவது நேரான வழியல்ல. கபத்திற்கே முதலில் சிகித்ஸை செய்யவேண்டும் என்று ஸமாதானப் படுத்துகிறார்.

सन्निपाते समुत्पन्ने किमादावभ्युपक्रमेत् ।
एतत्प्रश्नमतश्चोर्ध्वं चिकित्सोपक्रमं शृणु ।
संमोहमत्र भूयिष्ठं भिषजो यान्त्यनिश्चिताः ।
अग्रे मूले च भैषज्यं कुर्वन्तो घ्नन्ति मानवम् ।
यं दोषमुद्बलं पश्येत् संनिपाते स्वलक्षणैः ।
तस्याग्रे निग्रहं कुर्यादित्यन्यभिषजो विदुः ।
वृद्धजीवक ! नैवं तु वयं कुर्मश्चिकित्सितम् ।
असम्यग्दर्शिनस्ते तु य एवं भिषजो विदुः ।
श्लेष्मनिग्रहमेवादौ कुर्याद्व्याधौ त्रिदोषजे ।

ஸந்நிபாத ஜ்வர சிகித்ஸையில் வாதபித்தகபங்கள் மூன்றும் பலப்பட்டு கடுமையான நோய் நிலையை ஏற்படுத்தும் போது முதலில் கபத்தைச் சிராக்கும் சிகித்ஸையைக் கையாளுவது அவசியம். அதனால் அடைபட்ட ஸ்ரோதஸ்ஸுக்கள் அடைப்பு நீங்கி, லாகவம் ஏற்பட்டுத் தடை நீங்குவதால் நாவரட்சி நீங்கி, உடல் இயற்கைச் செயல்களைப் புரிய முடிகின்றது. தலை, ஹிருதயம், காது, விலா முதலிய இடங்களில் உள்ள வலி முதலியவை குறைந்து கண்பார்வை தெளிந்து வியாதி குறைகின்றன- என இதற்கு விளக்கமும் தருகிறார். இதற்கான சிகித்ஸா

முறைகளாக வமனம், லங்கனம், ஸ்வேதனம், நஸ்யம், மர்தனம், கவலக்ரஹம் போன்ற உபசாரங்களை உபதேசிக்கிறார். இவைகளில் ஒன்றும் புதிய விசேஷமில்லை. ஆனால் அந்த கபத்திற்கே முக்ய மருந்தான தேன் ஸந்நிபாத நிலையில் உபயோகிக்கத்தக்கதல்ல. தேன் சீத குணமுள்ளது. உஷ்ணமே இந்நிலையில் சேர்க்கத்தக்கது எனக் கூறுவது ஒரு புதிய விஷயம்.

**सर्वेषु सन्निपातेषु न क्षौद्रमवचारयेत्।**
**शीतोपचारि हि क्षौद्रं शीतं चात्र विरूध्यते।**
**उष्णोपचारी सततं संनिपाती प्रशस्यते।**

தேனின் உபயோகம் சீத **உபசாரம்** ஆகும் என்பதும் கவனிக்கத்தக்கது. இங்கு தேனிலுள்ள ஸ்பர்ச சீதத்தன்மை காரணமாகவே தேன் தள்ளப்படுகிறதா? இந்த சீதத்தன்மை மற்ற இடங்களில் எவ்விதம் கப ஔஷதமாக இருக்க உதவுகிறது? ஸந்நிபாதத்தில் சீத உபசாரமே கெடுதலா? அல்லது தேனின் சீதம் மாத்திரம் கெடுதலா? மற்றும் அவசாரயேத் என்ற குறிப்பிட்ட சொல்லிற்கு ஸ்நேஹ அவசாரணம் முதலிய இடங்களில் தனித்து அதிக அளவில் கொடுப்பது என்ற பொருள் உண்டு. இங்கும் கபஹரணம் என்ற லக்ஷ்யத்துடன் தேனை அவசாரண முறையில் உபயோகிக்கக்கூடாது என்று மாத்திரம் கருத்துக்கொள்ளலாமா? வேறு ரஸமருந்துகள் முதலியதின் வாஹகமாகக் குழைத்துச் சாப்பிடும் அளவில் கூட தேன் உபயோகப்படுத்தக்கூடாதா? சாஸ்திரப் பிரயோக அனுபவமுள்ளவர்கள் இதுபற்றி ஆராய்வது மிகவும் உபகாரகமாயிருக்கும்.

---

# ஸுவர்ணவங்கம்

[ஸ்ரீ மிலாப் சந்திரஜைன் B. A. பிஷகாசார்ய]

[ஸசித்ர ஆயுர்வேதத்தில் வெளியான இக்கட்டுரை இவ்விஷயத்தில் ஆசிரியரின் ஆராய்ச்சித் திறனை நன்கு வெளிப்படுத்துகின்றது. ஆசிரியர் ஜாம் நகரில் உள்ள போஸ்டுகிராஜுயேட் ட்ரைனிங் ஸெண்டரில் உதவி மருந்து உற்பத்தித்துறையினராக இருப்பவர். ஸசித்ர ஆயுர்வேதத்தில் வெளியான கட்டுரையின் சுருக்கத்தை இங்கு தருகிறோம். —ஆசிரியர்]

பாரததேசத்தின் ரஸசாஸ்திரிகள் ஔஷத நிர்மாண கலையின் பல்வேறு வழிகளையும் நன்கு விரிவடையச் செய்திருக்கி

றார்கள். மருந்துச் சரக்குகளின் சேர்க்கையாலும் பாக காலத்தில் ஏற்படும் பரிணாமம் பிரிவினை முதலியவைகளாலும் ஏற்படும் பஞ்சபூத மாறுதல்களுள்பட பல்வேறு பௌதிக—ரஸாயனமாறுதல்களை விரிவாகக் கண்டுபிடித்துள்ளார்கள். இந்த அறிவின் அடிப்படையில் செய்யப்படும் முறைகளில் ஸ்வர்ணவங்கமும் ஒன்றாகும்.

இயற்கைப்பொருளில் ஏற்படும் மாறுதல்களுக்குக் காரணமாக ஜலம் நெருப்பு இவைகளுடன் சேர்க்கை அழுக்கு நீங்கப் பெறுதல், கடைதல், இடம், நேரம், பாவனைகள் முதலியவை ஆகின்றன. தற்போது கூறப்படும் விஷயத்திலும் ஏற்படவிருக்கும் மாறுதல்களுக்கும் மேற்கூறியவையே காரணமாகின்றன.

**இப்பெயரிடக் காரணம்**

இப்பெயர் தகுந்த காரணத்தைக்கொண்டு ஏற்பட்டதாயினும் சற்று பிரமை ஊட்டக்கூடியதே. ஸுவர்ணவங்கம் என்ற பெயரிலுள்ள ஸுவர்ணம் தங்கம் எனப்படுவதல்ல. இதில் தங்கம் சேர்வதில்லை. தங்கமாகவும் மாறுவதுமில்லை. ஆனால் ஸு-வர்ணம் நல்ல நிறம் என்ற பொருளிலேயே இச் சொல் வழங்கப்படுகிறது. தங்கநிறத்தில் தளுக்குடன் விளங்குவது எனப் பொருள். வங்கம் என்பது ஈயம். ஈயமே இங்கு தங்கநிறத்தைப் பெறுகிறது. வங்கம் தங்கநிறம் பெறுகிறதால் ஸ்வர்ணவங்கம் எனப் பெயர்.

இதை யார் கண்டுபிடித்திருப்பார்கள்? கீழான லோஹத்தை தங்கமாக மாற்றும் ரஸவாதிகளா? ஔஷதத்திற்காக தங்க வேலை செய்யும் தேஹவாதிகளா? தாதுவேதம் தேஹவேதம் இரண்டுமே ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு உள்ளவையே. அதனால் இதில் யார் அதிகப் பங்கு பெறக்கூடும் என்பது விளங்காது. இருவருக்கும் பெருமை தரக்கூடியதெனக் கருத இடமுண்டு. 16-வது நூற்றாண்டில் வங்க தேசத்திலிருந்த கோவிந்த தாஸர் தமது பைஷஜ்யரத்னாவளியில் இதைத் தொகுத்துள்ளார். அவர் தம்முன்னோர்களின் அனுபவ ஸித்தமான ப்ரயோகங்களையே தொகுத்தவராதலின் அவருக்கு முன் யார் இதைக் கண்டுபிடித்திருக்கலாம் என்பது இன்னும் ஆராய்ச்சிக்குரிய விஷயம்.

பைஷஜ்யரத்னாவளியில் கண்ட யோகத்திற்குப் பிறகு இப்போது அதில் கிரமமாக இருவகையில் அபிவிருத்தி காணப்

படுகிறது. ஒன்று சரக்குகள் விஷயத்தில் அளவு தாரதம்யம். மற்றொன்று செய்முறையில் விசேஷித்த விரிவு. பைஷஜ்யரத்னா வளியில் கூறியுள்ள முறைக்கும் அதற்குப் பின்னர் வந்த ரஸ தரங்கிணீ காரரான நரேந்திரநாதமித்திரர், ஸித்த யோக ஸங்கிரஹம் முதலிய நூலாசிரியரான யாதவஜீ முதலியவர்கள் ஈயத்திற்கே முக்கியத்துவமளித்துள்ளனர். யாதவஜீ வெடியுப்பு சேர்த்து யோகத்தை மேலும் பரிஷ்காரம் செய்துள்ளார். செய்முறையில் கஜ்ஜலியை அலம்பும் முறை காணப்படவில்லை. பின் வந்த நூல்கள் ஸ்வர்ணவங்கத்தின் நிறம் பிரகாசமாக இருக்க அலம்புவதன் அவசியத்தை யுணர்ந்து கையாளச் சொல்கின்றன. கூபீபக்வ நிர்மாண விக்ஞானம் எழுதிய ஸ்ரீ ஹரி சரணாநந்த ஸ்வாமியும் பாக காலத்தில் கவனிக்கத்தக்கவைகளையும் அக்னி அளவுகளையும் நவீன ரீதியில் அளந்து 175°C க்கு மேல் நெருப்பின் தாபம் இருக்கக்கூடாதெனக் கூறுவதும் விசேஷ அபிவிருத்தியாகும். தற்போது ஸ்வர்ண வங்க யோகங்களை மூலபாடத்திற்கேற்ப விளக்குவோம்.

**முதல் யோகம் :** பைஷஜ்யரத்னாவளியில் பிரமேஹாதிகாரத்திலுள்ளது.

சுத்த ஈயத்தை இருப்புச்சட்டி அல்லது மண்சட்டியிலிட்டு உருக்கி அதில் ஸமஅளவு ரஸத்தைச் சேர்த்து வெட்டையானதும் அரைத்து ரஸத்திற்குச் சமஅளவு கந்தகம் சேர்த்து கஜ்ஜலி செய்துகொண்டு கந்தகத்திற்குச் சமம் நவச்சாரம் சேர்த்தரைத்து மண்சீலை செய்யப்பட்ட காசகுப்பியிலிட்டு 4 யாமம் வாலுகாயந்திரத்தில் எரித்து ஆறியபின்னர் எடுத்துக் கொள்ளவும்.

மேஹநோயைப் போக்கும். காந்தி மேதை பலம் அஜீர்ண சக்தி இவைகளை அதிகரிக்கச் செய்யும்.

**குறிப்பு :** இந்த யோகத்தில் ரஸவங்கச் சேர்க்கையை அலம்புவது பற்றிக் குறிப்பிடக்காணோம். நல்ல நிறம் காண அலம்புவது அவசியமாகின்றது.

**இரண்டாவது முறை :** ரஸதரங்கிணீயிலுள்ளது. முறை முதல் முறையை ஒத்திருந்தாலும் சில செய்முறைக் குறிப்புகள் தனிப்பட்டுத் தரப்படுகின்றன.

சுத்த ஈயம் 3 தோலாவை இருப்புக் கடாயிலிட்டு உருக்கி 3 தோலா ரஸம் சேர்த்து வெட்டையானதும் கல்வத்திலிட்டு அரைத்து இந்துப்பும் அம்லரஸமும் (புளிப்பான எலுமிச்சம் பழம் நார்த்தை முதலியதன் சாறு) விட்டுக் குழம்பி அலம்பி

எடுத்து அதில் 3 தோலா கந்தகமும் நவச்சாரமும் சேர்த்து நன்கு அரைக்கவும். மண்சீலை செய்த காசகுப்பியிலிட்டு வாலுகாயந்திரத்தில் நான்கு யாமங்கள் எரித்து காசகுப்பியின் வாயில் புகை வருவது நின்றதும் குப்பியைக் கிடுக்கியால் மணலிலிருந்தும் அகற்றிவிடவும். ஆறிய பின்னர் எடுத்துக் கொள்ளவும்.

குறிப்பு: கல்வத்தில் ரஸத்தைப்போட்டு அதன்மேல் உருகிய ஈயத்தைச் சாய்த்து உடன் அரைப்பது நல்லது. உருகிய ஈயத்தில் கரண்டியிலேயே ரஸத்தைப்போட அது தெரித்து விடும் என்பதும் கவனிக்கதக்கது.

**மூன்றாவது முறை :** ரஸதரங்கிணியிலுள்ளது. எல்லாம் இரண்டாவது முறையை ஒத்திருந்தாலும் சரக்குகளின் அளவு மாறுபடுகின்றது.

ஈயம் 12 பங்கு, ரஸம் 6 பங்கு, கந்தகம் 8 பங்கு, நவச்சாரம் 6 பங்கு. செய்முறை முதலியவை முன்போல. செலவு குறைவு. நிறம் நன்கு அமையும்.

**நான்காவது முறை :** யாதவஜீ அவர்களின் ரஸாமிருதத்திலுள்ளது. மூன்றாவது முறைபடி மற்றவை. கந்தகம் 8 பங்கிற்குப்பதிலாக 6 பங்கு.

யாதவஜீயே கொடுத்துள்ள இதன் விரிவுரையில் நவச்சாரத்திற்குச் சமம் வெடியுப்பும் சேர்த்து அரைக்கவும், வங்க ரஸத்தைக் கருப்புமறையும் வரை எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து அலம்பவும் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. நாட்பட்ட ச்வாஸகாஸத்தில் இது குணமளிப்பதாகவும் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

**ஐந்தாவது முறை :** கூபீ பக்வ விக்ஞானம் எழுதிய ஹரிசரணாநந்தரின் சொந்த முறை.

ரஸம் ஈயம் நவச்சாரம் இவை வகைக்கு ஒருபங்கு, கந்தகம் 3 பங்கு என்று அளவில் மாறுதல். அக்னியின் அளவு 175°C க்கு மேலாகக் கூடாதென்று விரிவுரை. விரிவுரையில் "குப்பியிலிருந்து வெண்புகை வருவது நின்றவுடன் ஆறவிடவும், மீதியுள்ள கந்தகமும் நவச்சாரமும் தானே வெளியாகும்; அதன் ஒரு பகுதி குப்பியில் கழுத்தில் தங்கும்; அடியில் தங்க நிறத்தில் ஈயம் காணும்; மேல் ரஸமும் கந்தகமும் சேர்ந்த கருத்த கணங்கள் பப்படம் போன்று காணும். இந்தக் கருப்பு அம்சத்தைப் பிரித்தெடுத்து மறுபடியும் குப்பியிலிட்டு ரஸ ஸிந்தூர முறையில் எரித்தெடுக்க, வங்க ஸிந்தூரம் தயாராகும். சிலர் ரஸத்

திற்கு வீசம் பங்கு வெடியுப்பு சேர்ப்பது உண்டு, அதனுல் ஸ்வர்ணவங்கத்தின் எடைகூடும்'' என்றுள்ள குறிப்பும் கவனிக்கத்தக்கது. 10 தடவை காடியல்லது எலுமிச்சம்பழச் சாற்றில் ரஸவங்கத்தை அலம்பி எடுப்பதும் விசேஷம்.

இவைகளில் யாதவஜீயின் செய்முறை எளிது. மற்றவைகளில் கந்தகம் முதலில் ஆவியாகும் சரக்குகளின் அளவு அதிகமானபடியால் நெருப்பு அதிகமாகத் தேவை. செய்முறையில் ஸௌகர்யம், நேரக் குறைவு, விலேக் குறைவு இவைகளேக் கவனிக்குங்கால் யாதவஜீ முறையே நல்லது.

**செய்முறையில் கவனிக்கவேண்டியவை:**

1. சுத்திசெய்த ஈயத்தையே எடுத்துக்கொள்ளவேண்டும். இதற்கான வழிகள் நூல்களில் பரக்கப் பேசப்பட்டுள்ளன.

2. இருப்புக்கரண்டி அல்லது மட்பாத்திரம். ஈயம் உருக்குவதற்காக இருப்புக்கரண்டியே நல்லது. உடையும் என்ற பயமில்லே.

3. ஈயம் 232°C அளவுள்ள சூட்டில் உருகுகின்றது. வேறு பாத்திரத்தில் ரஸத்தைவிட்டு அதன்மேல் சூடுகுறையாதிருக்கும்போதே உருகிய ஈயத்தைச் சாய்க்கவேண்டும். ஈயத்தின் தாபம் குறைந்தால் வெட்டையாகாது. அரைத்தால் அரைபடாது. உருகிய ஈயத்தில் ரஸத்தைப் போடக்கூடாது. வெடித்துத் தெரித்து ஓடும். கேடு விளேவிக்கும். ஈயம் உருகிய நிலேயில் தனித்தனி அணுவாக பிரிந்து நிற்கின்றது. ரஸம் அந்நிலேயில் வங்கத்தில் ஊடுருவிப் பாய்ந்து அதன் அமைப்பு—சூர்ணமாகாத தன்மையை மாற்றிவிடுகிறது. இந்த மாறுதலுக்காகவே ரஸவங்கம் இவ்விதம் தயாரிக்கப்படுகின்றது.

4. ரஸமும் வங்கமும் சேர்ந்தபின் உப்பும், அம்ல ரஸமும் சேர்த்து அரைக்கும்போது ரஸவங்கத்திலுள்ள அழுக்கு அம்ல ரஸத்தில் கரைந்து வெளியாகின்றது. ரஸவங்க லோகம் சுத்தமாகிறது.

5. அலம்பி ஈரம் உலர்ந்த ரஸவங்கத்தில் கந்தகம் சேர்த்து அரைக்கவேண்டும். கஜ்ஜலி நன்கு கறுத்து மென்மையடைந்து விரல் ரேகைகளில் பதியுமளவிற்கு நன்கு அரைபடவேண்டும். இது Black sulphide of Mercury with Tin ஆக ஆகின்றது.

6. இதன்பின் நவச்சாரம் போட்டு அரைக்கவேண்டும். நவச்சாரத்தை அப்படியே போடுவது உண்டு. நவச்சாரத்தை

டமருயந்திரத்திலிட்டு பதங்கமாக்கி எடுத்துச் சேர்ப்பது உண்டு. பதங்கமான நவச்சாரம் அதிகத் தூய்மை பெற்றது. சுத்தமான நவச்சாரத்தையோ பதங்கித்த நவச்சாரத்தையோ சேர்க்கலாம். அழுக்குடனிருப்பதும் கலப்புள்ளதும் கருத்தது மான நவச்சாரம் ஏற்றதல்ல.

7. வெடியுப்பு நிறத்தை அதிகமாக்குகின்றது. ஈயத்தை உப்பாக்குவதில் உதவுகின்றது. நல்ல Catalystic Agent ஆகின்றது.

8. காசகுப்பி: 7 மண்சீலை செய்த குப்பி நல்லது. ஒரு சீலை செய்தது காய்ந்தபின்னரே இரண்டாவது மண்சீலை செய்வது நல்லது. அல்லது ஜயப்பூரில் கிடைக்கும் மூசைக்கான வெள்ளை மண்ணில் (मूसकी सफेद मिट्टी) அரைக்கால் பங்கு பழைய பஞ்சு சேர்த்து இடித்து ஜலத்தில் பிசைந்து குப்பியின் மேல் அரை அங்குல கனம் ஒரே சீராகப் பூசிவிட்டால் போதுமானது. மண் பாத்திரத்தையும் 7 மண்சீலையிட்டு உபயோகிக்கலாம். அதிக அளவில் தயாரிக்க மண்பாத்திரமே நல்லது. குறைந்த அளவில் உபயோகமுள்ளவர்களும் பரீக்ஷை பார்ப்பவர்களும் குப்பியில் தயாரிக்கலாம்

9. பாத்திரத்தில் நிரப்பும் அளவு:— அதிக அளவில் கஜ்ஜலியை நிரப்பினால் கஜ்ஜலி உருகும்போது நிரம்பி வழியும். குறைந்த அளவில் போட்டால் சூடு மிகுந்துகொடுக்க நேரிடும். ஈயம் போடுமளவிற்கேற்ப ஸ்வர்ணவங்கம் தயாராகும். மற்றொன்று கஜ்ஜலி எத்தனை இடத்தை நிரப்பும் என்பதும் கவனிக்கத்தக்கது. அதனால் எடை நிரப்புமிடம் இரண்டும் கவனிக்கத்தக்கது. ஈயத்தின் எடைக்கு 6 பங்கு ஜலம் பிடிக்கும் பாத்திரம் தேவை. ஈயம் 10 தோலாவானால் 60 தோலா (24 அவுன்ஸ்) ஜலம் பிடிக்கும் பாத்திரம் தேவை. ஸ்வர்ண வங்கமாக மாறும் போது இலேசாகி அதிக அளவில் இடத்தை நிரப்புகின்றது.

மற்றொன்று கஜ்ஜலி பாத்திரத்தின் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேல் இடத்தை அடைக்கக்கூடாது. இதைவிட அதிக இடத்தை ஆக்ரமித்துக்கொண்டால் கஜ்ஜலி உருகும்போது வெளியாகிவிடும்.

10. வாலுகாயந்திரம்: இதை மண்சட்டி அல்லது இரும்புச் சட்டியில் தயாரிக்கலாம். இருப்புச்சட்டியிலிருப்பது தான் நல்லது. ஒரு அங்குலம் அளவு மணல் நிரப்பி அதன் மேல்

குப்பியை வைத்து குப்பியின் கழுத்துவரை மணலை நிரப்பிவிட வேண்டும். இந்த மணல் தாபத்தைச் சீராக்குவதற்கு உதவு கின்றது. அடுப்பு— அதன்மேல் வைக்கப்படும் வாலுகாயந்திரம் இவை நெருப்பின் தாபம் ஒரே சீராக இருக்குமாறு அமைக்கப் படுவது அவசியம்.

*11.* பாககாலத்தில் ஏற்படும் மாறுதல்கள்: இம் மாறுதல் களைக் கவனிப்பது மருந்து சரியாக அமைகிறதா என்பதை ஊஹிக்க உதவும். இதில் சேர்பவை ஈயம், ரஸம், கந்தகம், நவச்சாரம், வெடியுப்பு என்ற ஐந்து சரக்குகள். இதில் ஈயத்தைத் தவிர மற்றவை ஆவியாக வெளியாகுபவை. ஆனால் அவை அவ்விதம் வெளியேறுவதில் சில தாரதம்யம் உண்டு. கந்தகம் இருக்கும்வரை ரஸம் வெளியிற்கிளம்பாது. நவச்சாரம் கந்தகத்திற்கு முன்னும் கந்தகத்துடனும் மேல் ஏறும். நவச் சாரம் வெளியாகும்போது அம்மோனியாவின் மணம் நன்கு புலப்படும். அம்மணமே நவச்சாரம் வெளியாவதன் அறிகுறி. வெளியாகும் நவச்சாரம் குப்பியின் கழுத்திலுள்ள குளிர்ச்சி யால் அங்கேயே தங்கிச் சேர ஆரம்பிக்கும். அதனால் பழுக்கக் காய்ச்சிய இரும்புச் சலாகையால் வாயைக் கிளறிவிட வேண் டும். இல்லாவிடில் குப்பி வாய்மூடி குப்பியே மேல் எழும்பும், அல்லது வெடிக்கும்.

நவச்சாரமும் கந்தகமும் வெளியானதும் புகை வெளி யாவது நின்றுவிடும். இந்நிலையில் ஸ்வர்ணவங்க பாகம் பூர்த்தி யாகிவிட்டதென்பதை புகைநிற்பதன் மூலம் அறியலாம். மற்றொரு முறையுமுண்டு. காய்ச்சப்படாத சூடாகாத இரும்புச் சலாகையை குப்பியின் அடிவரை செலுத்தி குப்பியின் அடியி லுள்ள சாமானில் பட்டவுடன் எடுக்க சலாகையில் ஸ்வர்ண வங்கம் மஞ்சளாகத் தளுக்குடன் ஒட்டிக்கொண்டிருக்கும். ஸ்வர்ணவங்கம் தயாராகாதிருந்தால் சலாகை அடிவரை செல் லும். மிருதுவான உருகிய கஜ்ஜலி-பாகமாகாதிருப்பது இதனால் நன்கு புலப்படும். இந்த பரீக்ஷை நன்கு நம்பக்கூடியது. இந்த பரீக்ஷையால் ஸ்வர்ணவங்கம் பாகமாகாதிருப்பதாக அறியப்பட் டால் பாகமாகும் வரை தொடர்ந்து எரிக்கவேண்டும்.

[இதை நவீன விஞ்ஞானரீதியில் பரீக்ஷித்து அதன் முடிவுகளை ஆசிரியர் கொடுத்துள்ளதை அடுத்த இதழில் தருகிறோம். —ஆசிரியர்.]

**செய்திகள் :**

# திருச்சி ஆயுர்வேத ஸபை.

## புதிய நிர்வாஹஸமிதி.

திருச்சி ஆயுர்வேதஸபையின் 28-வது ஆண்டின் முதற்கூட்டம் திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் 8—2—61 புதன்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்றது. வைத்யவிசாரத, ஆயுர்வேத சிரோமணி ஸ்ரீ P. விச்வநாத சர்மா அவர்கள் தலைமை வகித்தார்கள்.

ஸ்ரீ தந்வந்தரி பிரார்த்தனைக்குப் பிறகு கார்யதர்சியால் ஸமர்ப்பிக்கப் பட்ட வரவு செலவு கணக்கு ஏற்கப்பட்டது.

1961-ம் வருஷத்திற்கு அடியிற் கண்டவாறு புதிய நிர்வாஹ ஸமிதி தேர்ந்தெடுக்கப் பட்டது.

1. ஸ்ரீ T. S. ஈச்வர அய்யர், L. I. M. — தலைவர்.
2. ,, பிஷக்ரத்ன N. C. S. ராகவன் — கார்யதர்சி
3. ,, R. V. ராமய்யர் — அங்கத்தினர்.
   (வைத்ய விசாரத ஆயுர்வேத சிரோமணி)
4. ,, S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி — ,,
   (வைத்ய விசாரத, ஆயுர்வேத சிரோமணி)
5. ,, M. P. முத்துராமய்யர் — ,,
6. ,, பிஷக்வர A. ராகவராவ், A. L. I. M. ,,
7. ,, P. விச்வநாதசர்மா — ,,
   (ஆயுர்வேத சிரோமணி, வைத்யவிசாரத)

பிறகு சிறுநீரில் ஆல்புமின் (Albumin) என்பது பற்றி சர்ச்சை நடைபெற்றது.

வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

## மேற்கு வங்கத்தில் புதிய ஆயுர்வேத மசோதா.

*பச்சிம பங்க ஆயுர்வேத பரிஷத் என்ற பெயரில் ஒரு குழுவை அமைத்து ஆயுர்வேத வைத்ய நிர்வாஹத்தை அதனிடம் ஒப்படைக்க இந்த மசோதாவை மேற்கு வங்காள அரசாங்கம் கொணர்ந்திருக்கிறது. இதற்கு முன்* **General Council and State faculty of Ayurvedic medicine** *என்ற பெயரிலிருந்த குழு ரத்தாகிவிடும். அதன் பொறுப்பை பரிஷத் ஏற்றுவிடுகின்றது. இதற்கு கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் இருப்பார்கள்.*

1: தலைவர்— சர்க்காரால் நியமிக்கப்படுபவர்.

2. அங்கத்தினர்கள் 7. சர்க்காரால் நியமிக்கப்படுபவர். இதில் மூவர் பதிவு பெற்ற வைத்யர்கள்.

3. கல்கத்தா ஸர்வகலாசாலை துணை வேந்தரால் நியமிக்கப்படுபவர் ஒருவர்.

4. அரசாங்க ஆயுர்வேத கலாசாலை ஒன்று ஏற்படுத்தப் பட்டால் அதன் தலைவர்.

5. அரசாங்க ஆயுர்வேத ஆராய்ச்சிக் கழகம் ஒன்று திறவப்பட்டால் அதன் தலைவர்.

6. ஆயுர்வேதபாடசாலைகளின் தலைவர்களுக்குள் ஒருவர் அரசாங்கத்தால் நியமிக்கப்படுபவர்.

4-5-6 இவைகளிலுள்ளவர்கள் கிடைக்கும் வரை தற்போதுள்ள ஆயுர்வேத கல்விஸ்தாபனங்களின் தலைவர்களோ வேறு தகுதியுள்ளவர்களோ இந்த ஸ்தானத்திற்கு நியமிக்கப் படுவார்கள்.

7. பதிவு பெற்ற வைத்தியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 வைத்யர்கள்.

இந்தக் குழுவே ஆயுர்வேதத் துறையின் பதிவு முதலியதின் நிர்வாஹத்தைக் கவனிக்கும்.

* * *

## செங்கற்பட்டில் ஆயுர்வேத குஷ்ட சிகித்ஸை

செங்கற்பட்டில் குஷ்ட நிவாரண கேந்திரத்தில் ஆயுர்வேத முறைப்படி சிகித்ஸைக்கான வழிகளை ஆராய அதன் அதிகாரிகளுடன் கலந்து பேச மத்தியசர்க்காரின் ஆயுர்வேத ஆலோசகர் டாக்டர் C. துவாரகநாத் அவர்கள் சென்ற மாதக்கடைசியில் செங்கற்பட்டிற்கு வந்து அதிகாரிகளுடன் கலந்து பேசித் திரும்பியுள்ளார்கள். சீக்கிரமே இதற்கான ஏற்பாடுகள் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீ துவாரகநாத் அவர்கள் சென்னையில் தங்கிய சமயம் சென்னை ராஜ்யத்தின் ஸுகாதார மந்திரியவர்களையும் கண்டு, ஸுகாதார மந்திரி கூட்டியிருந்த ஆயுர்வேத கலாசாலை நிறுவனத்திற்கான நிபுணர் குழுவிலும் கலந்துகொண்டார்.

*வாரியர்*

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

*விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.*

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

*சைனா பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.*

*(1936-ல் நிறுவப்பட்டது.)*

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

**K. L. TALWAR & BROS.**

**MUSK MERCHANTS.**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால்
இனாமாக அனுப்பப் பெறும்.



கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்ப்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS.**

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs
Merchants.

LUDHIANA, PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.